**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.190/2024**
**வழக்கு சாட்சி PW.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திருமதி.V.கொளுந்தம்மாள் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திருமதி.ராதா | தொழில் | : இல்லத்தரசி |
| தகப்பனார் பெயர் | : நாச்சிமுத்து | கணவர் பெயர் | : காளிமுத்து |
| கிராமம் | : ஐ.வாடிப்பட்டி | வயது | : சுமார் |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 173.03.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

<u>1ம் பிரதிவாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் தொடர்சியான குறுக்கு விசாரணை</u>

எனது தகப்பனார் இவ்வழக்கில் 2ம் பிரதிவாதி தான் என்றால் ? சரிதான். எனது தாயார் ஈஸ்வரி என்பவருக்கு 21.08.1985ம் ஆண்டு செட்டில்மெண்டு எழுதிவைத்துள்ளாரா என்றால் ? ஆமாம். 21.08.1985 ஆண்டு செட்டில்மெண்டு ஆவணத்தை நான் ஏற்றுக்கொள்கிறேனா என்றால் ? ஆமாம். 26.09.1983ம் தேதியில் எங்களது குடும்பத்திற்குள் ஏற்படுத்திய பாகப்பிரிவினை நான் ஏற்றுக்கொள்றேனா என்றால்? ஆமாம் நான் ஏற்றுக்கொள்கிறேன். எனது தகப்பனார் அவரது தாயாருக்கு எழுதிவைத்த செட்டில்மெண்டு பத்திரத்தை நான் ஏற்றுக்கொள்ள மறுக்கிறேன் என்றால் ? ஆமாம், 1983 ம் ஆண்டே பாகப்பிரிவினை நடந்து முடிந்துவிட்டது, அதில் எனது தகப்பனாரின் பெற்றோர்கள் அவரது ஆயுள் வரை அனுபவித்துக்கொள்ளாம் என்று சரத்து உள்ளது, எனது தகப்பனாரின் பெற்றோர்களின் ஆயுட் காலத்திற்கு பிறகு எனது பெரியாப்பாவும், எனது தகப்பனாரும் அனுபவித்துக்கொள்ளம் என்று

சரத்து ஏற்படுத்தப்பட்டுள்ளது. அந்த பாகப்பிரிவினை பத்திரத்தை நான் படித்துப்பார்த்துள்ளேன் என்றால் ? நான் படித்துப்பார்த்துள்ளேன். என்னிடம் காட்டப்படும், வா.சா.ஆ.3 ஆவணத்தில் சாட்சியாக யார் கையொப்பம் செய்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் ? அந்த நபர்கள் யார் என்று எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தை யார் தயார் செய்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் ? எனக்கு அதுப்பற்றி தெரியவில்லை. ஏற்கனவே என்னை குறுக்கு விசாரணை செய்த போது சொத்து விபரத்தை சொல்லவில்லை என்றால் ? சரியல்ல. சொத்துவிபரம் பற்றி எனக்கு தெரியும், நான் சொல்வது தவறு என்றாலும், சொத்து விபரம் பற்றி தெரியாத நிலையிலும், சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ? சரியல்ல. எனக்கு எனது தகப்பனார் ஏதேனும் செட்டில்மெண்டு எழுதிவைத்துள்ளார அல்லது இல்லையா என்றால் ? எனது தகப்பனாரும், தாயாரும் சேர்ந்து தான் எழுதிவைத்துள்ளார்கள். என்னிடம் காட்டப்படும் வா.சா. ஆ 5 ஆவணம் யார், யாருக்கு எழுதிவைத்துள்ளார்கள் என்றால் ? எனது தகப்பனார் எனக்கு எழுதி வைத்துள்ளார்கள். நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள எந்த ஆவணத்தைப்பற்றியும் எனக்கு தெரியாது என்றால் ? சரியல்ல, எனக்கு தெரியும். இவ்வழக்கில் எனது பெரியப்பாவின் மேஜர் மகன்கள் இருவரையும் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால்? சேர்க்கவில்லை. உரிய தரப்பினரை சேர்க்கத காரணத்தினால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யவேண்டுமென்றால் ? சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள 3வது ஆவணத்தின் தன்மைப்படி எனது தகப்பனார் கடந்த 30.12.2002 ம் ஆண்டு அவரது தாயாருக்கு எழுதிவைத்துள்ள செட்டில்மெண்டு ஆவணம் சரியான படிதான் எழுதிவைத்துள்ளார் என்றால்? சரியானது அல்ல. நான் தாக்கல் செய்துள்ள 3வது ஆவணம்

அத்தம்மாள் என்பவர் எனது பெரியப்பா சுப்பிரமணி என்பவருக்கு செட்டில்மெண்டு ஆவணம் எழுதிவைத்துள்ளார் என்றால் ? எழுதிவைத்துள்ளார், ஆனால் சரியான ஆவணமல்ல. அந்த ஆவணத்தை நான் படித்துப்பார்தேனா என்றால் ? படித்துப்பார்த்துள்ளேன். அந்த ஆவணத்தில் யார் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள் என்றால்? எனக்கு தெரியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள 4வது ஆவணமான உயில் சாசனத்தில் யார் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் ? எனக்கு மறந்துவிட்டது. இவ்வழக்கில் எந்த ஆவணத்தைப்பற்றியும் எனக்கு தெரியாது என்றால்? சரியல்ல, சாட்சிகளைப்பற்றிதான் மறந்து விட்டது, வழக்கு ஆவணங்கள், வழக்கு பற்றி தெரியும். இவ்வழக்கைப் பொறுத்து நான் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால்? சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கை தள்ளுபடி செய்யவேண்டுமென்றால் ? சரியல்ல.

Takendown by me in opencourt and

Readover by me and acknowledged by him/her to be correct.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.03.17 19:21:15 +0530

Sub Judge,
Oddanchatram